**தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 48.35 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 44.84 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 3.5 மில்லியன் அதாவது 7.26 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 45.45 | 42.12 | 3.33 | 7.33 |
| மூலதனம் | 2.90 | 2.72 | 0.18 | 6.21 |
| மொத்தம் | **48.35** | **44.84** | **3.51** | **7.26** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### 2.2.1 பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 20501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.75 | 1.55 | 1.50 | 2.39 | 10.50 | 6.31 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0141/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1.83 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் வரும் 6000/0000/00/0002/0122/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.55 மில்லியன் ஆகும்.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iv) | விடுமுறைப் பதிவேடு | தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவொன்றிற்கு 2016 மே 31 ஆம் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்கும் உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,821,319 மில்லியனாக இருந்தது.

### 3.3 பாதீட்டு முரண்

02 மூலதன செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அச்செலவின விடயங்கள் இரண்டில் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 24 சதவீதம் மற்றும் 62 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தன.

### 3.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

20501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 656,194 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவீடு செய்வதின் பின்தொடர் நடவடிக்கை பலவீனமாக இருந்தது.

### 3.5. உள்ளகக் கணக்காய்வு

14 செயற்திட்டங்களின் நிறைவேற்றப்பட வேண்டிய 67 செயற்பாடுகளுக்காக உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 9 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கள் வழங்கப்பட்டிருந்தன. முக்கியமான கணக்காய்வு துறையான நம்பிக்கைப் பொறுப்பு கணக்குகுளில் காண்பிக்கப்படும் மீதிகளை உறுதிப்படுத்தல், முதலீட்டுப் பதிவேடுகள், பங்கு சான்றிதழ்களைப் பரிசோதித்தல், வங்கி உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல், சரியாக வட்டி மற்றும் பங்குலாபம் கிடைத்துள்ளதையும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2015 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 261,671 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.8 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | ரூபா | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 3.17.3 ஆம் பிரிவு | 123,440 | கடன்தொகையைச் செலுத்தி முடிப்பதற்குள் பிணையாளி ஓய்வுபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு ஓய்வு பெறுவதற்கு முன்னர் வேறொரு பிணையாளியை முன்வைப்பதாக எழுத்துமூல உறுதியைக் கடனாளியிடம் பெற்றுக்கொள்ளாமல் கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவு | 151,233 | ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் மீளச் செலுத்துவதற்குள்ள கடன் மீதியொன்று காணப்பட்டால் அம்மீதியை தமது மாற்றிய ஓய்வூதிய சம்பளத்திலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அல்லது திணைக்களத் தலைவருக்கு அதிகாரமளிப்பதாக 23 ஆவது அனுபந்தத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்தின் பிரகாரம் எழுதப்பட்ட இரத்துச் செய்ய முடியாத உறுதியொன்றில் உத்தியோகத்தரின் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படாமல் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 137(5) | 6,066,360 | வழங்கல் தொடர்பாக அதுவரை பரீட்சிக்கப்பட்டு சரியானதென பொறுப்பேற்று அப்பொருட்கள் தொடர்பாக கணக்கு காண்பிக்கப்பட்டிருந்ததாகவும் அவை மெய்மையாய்வு செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | 2,057,558 | ஒரு தடவையில் வழங்கக் கூடிய செயல் நிமித்த கட்டுநிதி எல்லை ரூபா 100,000 ஐ மிகைத்து 10 சந்தர்ப்பங்களில் செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப் பிரமாணம் 371(5) | 4,138,338 | 67 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த செயல் நிமித்த கட்டுநிதி 1 மாதம் முதல் 12 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது. 20 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 480,730 தொகையான செயல் நிமித்த கட்டுநிதி கணக்காய்வு திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 371(2) | 115,750 | பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும், 2 சந்தர்ப்பங்களில் தனியார் நிறுவனங்களுக்கு செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |

**3.9 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதீப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

**(அ) ஸ்ரீமா இந்தானி த சொய்சா பூதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2007 ஏப்ரல் 14 ஆந் திகதி காலஞ்சென்ற திருமதி ஸ்ரீமா இந்தானி த சொய்சா அவர்களின் இறுதி விருப்புப் பத்திரத்தின் பிரகாரம் பூதலுக்குரியவரின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு 2016 மே 30 ஆம் வரையிலும் அதாவது பூதலுக்குரியவர் இறந்து 09 ஆண்டுகள் கடந்ததன் பின்னரும் திணைக்களம் தவறயிருந்தது. மேலும் பூதலுக்குரியவரின் வீடு 2009 ஆகஸ்ட் மாதத்திலிருந்து உடன்படிக்கை செய்யப்பட்ட இணக்கப்பாடொன்றிற்கோ அல்லது வாடகை அறவீடோ இல்லாமல் பூதலுக்குரிய பொருட்களுடன் அப்போது திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச்சொத்துக்களை மீண்டும் திணைக்களத்தின் பொறுப்பில் பெற்றுக்கொள்வதற்கு தவறியதன் பேரில் அரச சொத்துக்கள் ஒழுங்கீனமாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) லபுஹேன வத்த**

என்.டீ.எஸ். சில்வா நம்பிக்கை பொறுப்பு சபையிடம் இருந்த குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள 98 ஏக்கர்களுடன் கூடிய லபுஹேனவத்த காணி 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதி பொது நம்பிக்கையாளருடன் மேற்கொள்ளப்பட்ட 1065 ஆம் இலக்க உடன்படிக்கையின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பாளருக்கு நிர்வாக பொறுப்பாளராக செயற்படுவதற்காக பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தின் நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த ஆதனத்தில் கரை சேற்று காணியின் அளவு, பிரதான பயிர்கள், துணைப் பயிர்கள், ஏனைய மர வகைகள், காணப்படும் கட்டிடங்கள், இயந்திரங்கள், பொறிகள் மற்றும் விசேட நிலைமைகள் தொடர்பாக உடன்படிக்கை செய்யப்பட்ட இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.

(ii) ஆதனங்களை அப்விருத்தி செய்வதற்காக என்.டீ.எஸ் சில்வா நம்பிக்கை பொறுப்பு சபையின் நிதிசார் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படாமல் ஆதனங்கள் கையேற்கப்பட்டிருந்தன. வேறு நம்பிக்கை பொறுப்பிடமிருந்த பணத்திலிருந்து ரூபா 6,382,565 தொகை லபுஹேன தோட்டத்திற்கு கணக்காய்வு திகதி வரை செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,440,750 தொகை வழக்கு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. நட்டமடைந்திருந்த மற்றும் உரித்துறுதி சீராகாத ஆதனமொன்று தொடர்பாக முகாமைத்துவ மற்றும் நிர்வாகப் பொறுப்பாளராக திணைக்களம் பொறுப்புகளுக்கு பொறுப்பாக இருந்ததுடன், அது திணைக்களத்திற்கு செலவினப் பொறுப்பாக மாத்திரம் இருந்தது.

(iii) இலாபம் உழைக்கும் நிலைமையில் காணப்படாத கணக்காய்வு திகதி வரை ரூபா 51,000 ஆன புலமைப்பரிசில் கொடுப்பனவு, செலவின கோவைகளின் பிரகாரம் செலவிடப்பட்ட ரூபா 211,811 ஆன செலவினம் பேரேட்டில் செலவினமொன்றாக பதிவுசெய்யப்படாமை, 15 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்ட ரூபா 700,465 கூட்டுத்தொகையான செலவினங்கள் மற்றும் தேங்காய் பறிப்பதற்காக முற்பணமாக செலுத்திய ரூபா 770,000 ஆன செலவினத்திற்காக உறுதிப்படுத்தல்கள் காணப்படாமை மற்றும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பு முடிவுக் கணக்குகளில் லபுஹேன தோட்டத்திற்குரிய கணக்குகளைச் சமர்ப்பிக்காமையால் நம்பிக்கைப் பொறுப்பாளராக திணைக்களத்தின் பொறுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) வனஸ்கல்ல வத்த**

2013 ஏப்ரல் 18 ஆந் திகதிய 4 ஆம் இலக்க இணக்கப்பாட்டின் பிரகாரம் என்.டீ.எஸ்.சில்வா முகாமைத்துவ பொறுப்பிடமிருந்து குருணாகல் வேஉடவில் அமைந்துள்ள 100 ஏக்கர் அளவிலான வனஸ்கல்ல தோட்ட முகாமைத்துவ மற்றும் நிர்வாகப் பொறுப்பாளராக திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) வனஸ்கல்ல தோட்டத்தின் பௌதீக நிலைமை அதாவது சேற்றுக் காணி, பெருந்தோட்ட பயிர்கள், கட்டிடங்கள், இயந்திர பொறிகள் தொடர்பாக உடன்படிக்கை செய்யப்பட்ட இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. பொருளாதார பெறுமதியுடன் கூடிய மரங்கள் பொருட் பதிவேட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்படி இணக்கப்பாட்டிற்கு வரும்போது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதி, அபிவிருத்தியின் பின்னர் மீண்டும் என்டீ.எஸ்.சில்வா நம்பிக்கை பொறுப்பிற்கு தோட்டத்தினை கையளிப்பதற்கும் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய நலன்கள் தொடர்பாக உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக கணக்காய்வு திகதியில் ரூபா 2,267,293 தொகையொன்று வேறு நம்பிக்கை பொறுப்பு பொறுப்பான பணம் பயன்படுத்தப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்திற்கோ நிதிசார் பங்களிப்பை வழங்கிய வேறு நம்பிக்கை பொறுப்புக்களுக்கோ இதுவரை எவ்வித நலனும் கிடைத்திருக்கவில்லை.

(iii) தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக திணைக்களத்தினால் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், தோட்டத்தின் நிதி நிலைமை வரவு மீதியொன்றாக காணப்பட்டது. குறிப்பான கடமைப் பொறுப்புக்கள் கையளிக்கப்படாமல் 2014 செப்தம்பர் 17 ஆந் திகதி முதல் 2015 பெப்வரி 28 ஆந் திகதி வரை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் சேவைகளுக்காக திணைக்களத்தினால் ரூபா 152,800 படிகள் வழங்கப்பட்டிருந்தன.

**3.9.2 நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களை நிறைவேற்றாமை மற்றும் இலாபகரமான பொறுப்புகளிலிருந்து ஏனைய நம்பிக்கைப் பொறுப்புகளின் நோக்கங்களை நிறைவேற்றுதல்**

போதியளவு வருமானம் இருந்தும் நோக்கங்களை நிறைவேற்றுவது புறக்கணிக்கப்பட்டிருந்த 63 சந்தர்ப்பங்களும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக போதியளவு வருமானம் நம்பிக்கைப்

பொறுப்பில் இல்லாதிருக்கையில் ஏனைய நம்பிக்கைப் பொறுப்புகளின் பணத்தைப் பயன்படுத்தி நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்த 08 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.9.3 நம்பிக்கைப் பொறுப்பு பூதல்கள் தொடர்பான கணக்குகளைச் சமர்ப்பிக்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பு பூதல் இறுதிக் கணக்குகள் 2016 யூன் 30 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த நம்பிக்கைப் பொறுப்பு இறுதிக் கணக்குகளில் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திற்குரிய தோட்டங்களுக்குரிய இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், இறுதிக் கணக்குகளின் மூலம் அனைத்து நம்பிக்கை பொறுப்புகள் தொடர்பிலும் சரியானதும் உண்மையானதுமான நிலைமைகள் காட்டப்பட்டவில்லையென அவதானிக்கப்பட்டன.

(இ) ஒரு நம்பிக்கைப் பொறுப்பிடம் பல்வேறு ஆதனங்கள் காணப்படும் போது நம்பிக்கைப் பொறுப்பிற்கு தனியானதொரு கணக்கினைப் பேணுவதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆதனத்திற்கும் வெவ்வேறு கணக்குகள் பேணப்பட்டிருந்தன.

### 3.9.4. முதலீட்டு வட்டி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 1988 செப்தெம்பர் 01 ஆந் திகதி தாபிக்கப்பட்ட பொலிடெக்னிக் நம்பிக்கைப் பொறுப்பின் (C49) திரட்டிய மூலதன (முதலீடு) ரூபா 1,271,036 ஆக இருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முன்கொண்டு வரப்படுகின்ற வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 496,238 ஆக இருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கணக்கின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்காக எவ்வித வருமானமொன்றும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முதலீட்டின் பேரில் வட்டியைப் பெற்றுக்கொள்வதற்கும் முதலீட்டின் பேரில் பெறவேண்டிய வட்டியை கணக்குகளில் சீராக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களம் ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியின் பங்குகளிலிருந்து 87.56 சதவீதம் அதாவது ரூபா 30,050,380 ஆன பங்குகளை உரித்தாக கொண்டிருந்த போதிலும், அது தொடர்பாக ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலமோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பு பூதல் கணக்குகளின் மூலமோ எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சில விபரங்கள் பின்வருமாறு

**சமய மற்றும் சமூகசேவைகள் பொது நம்பிக்கை பொறுப்பு மூலம் செலவினங்களை மேற்கொள்ளல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு மூலம் திணைக்களத்தின் வழமையான நிர்வாக நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டு எல்லை மீறலைத் தவிர்ப்பதற்காக உரிய செலவின விடயங்களிலிருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கருப் பதிலாக சமய மற்றும் சமூகசேவைகள் பொது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதி மூலம் ரூபா 1,057,723 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சமய மற்றும் சமூகசேவைகள் பொது நம்பிக்கை பொறுப்பு மூலம் செலவிடப்பட்டிருந்த ரூபா 400,350 இற்குரிய செலவினங்களை உறுதிப்படுத்துவதற்கான உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

**வீரசிங்க அபேநாயக்க பூதல்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீரசிங்க அபேநாயக்க பூதலுக்கு உரித்தாக இருந்த மேற்கு கிருவாபத்துவே பொல்மொடே கிராமத்தில் அமைந்துள்ள மோதரமுனேயாய மற்றும் கந்துருவேகட ஒன்றிணைந்த காணியின் ‘‘ஏ’’ மற்றும் ‘‘பீ’’ குறியீட்டைக் கொண்ட 31.0287 ஹெக்டேயர் காணியை அரசு கையேற்பதற்குரித்தாக கிடைத்த ரூபா 16,500,000 தொகையான இழப்பீட்டுத் தொகை திணைக்கள நிதியத்திற்கு புறம்பாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே ரூபா 16,500,000 தொகையான நட்டஈட்டுத் தொகை உரிய நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் இனங்காணாமல் 2012 மார்ச் 06 ஆந் திகதி நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வைப்பிற்காக கிடைத்த வட்டி மாதாந்தம் சமய மற்றும் சமூகசேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் வீரசிங்க அபேநாயக்க பூதலிருந்து உழைத்த ரூபா 4,516,050 தொகையான வட்டித் தொகை அந்நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்ததுடன், நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தாமல் சமய மற்றும் சமூகசேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பினூடாக பொது நம்பிக்கையாளரின் தற்றுணிபின் பேரில் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அவ்வாறு நம்பிக்கைப் பொறுப்பிற்கு இழக்கப்பட்ட வருமானம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டு நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் வைப்புச் செய்வதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீரசிங்க அபேநாயக்க பூதலுக்குரிய மாத்தறை களஞ்சிய வீதியின் புஞ்சி பதஹே தோட்டத்தின் ‘‘பீ’’ எழுத்தினைக் கொண்ட காணித்துண்டில் பிரித்த இலக்கம் 3 உடைய 32 பேர்ச் பரப்பளவுடைய காணி தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்குறித்த ஆதனம் 2013 பெப்ரவரி 05 ஆந் திகதிய 312 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் மூலம் ரூபா 8,000 மாதாந்த வாடகைக்கு நபரொருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இங்கு மாதாந்த வாடகை மதிப்பீடு செய்தல் தொடர்பாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதி யளவிலும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் விசாரிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக முறையான வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த குத்தகை உடன்படிக்கையின் காலம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கோ அல்லது புதிய உடன்படிக்கையொன்றை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2014 ஏப்ரல் மாதத்திலிருந்து கணக்காய்வு திகதி வரை நிலுவை வீட்டு வாடகை ரூபா 128,000 ஐ அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.12 நட்டங்களும் இழப்புகளும்

2007 சனவரி 27 ஆந் திகதி வாகனமொன்று விபத்துக்குட்பட்டமையால் ஏற்பட்டிருந்த ரூபா 254,038 ஆன நட்டத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.13 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் சீராக்கப்படாதிருந்த பந்திகளுடனான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| **2012** | **5.1** | **பிரமுக வங்கியில் நிதி முதலீடு**<br>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் 40 பூதல்களுக்குரிய ரூபா 129,052,032 தொகை 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அவ் வங்கி மூடப்பட்டதன் பின்னர் அப்பணம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய வைப்பாகக் கருதப்பட்டு தேசிய சேமிப்பு வங்கியில் அரசாங்கத்திற்குரிய பங்கு மூலதனமாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. முதலீட்டிற்காக சாதாரண வட்டி விகிதாசாரத்தின் அடிப்படையில் அறவிட வேண்டிய ரூபா 160 மில்லியன் அளவிலான வட்டி வருமானத்தை 2015 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |

2012 10.1 **அம்புளுவாவ சுற்றாடல் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பை முறையற்ற வகையில் நிருவகித்தல்**

அம்புளுவாவ பிரதேசத்தில் சுற்றாடல் மற்றும் உயிரியல் பல்வகைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்துடன் 2000 செப்தெம்பர் 01 ஆந் திகதி ரூபா 100,000 மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய கணக்கில் கணக்காய்வுத் திகதியான 2013 செப்தம்பர் 11 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,709,170 வங்கி மேலதிகப்பற்று மீதி நிலவியது.

நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கங்களுக்கு முரணாக தனியார் வைத்திய பட்டியல்களை தீர்ப்பதற்காக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,802,816 கூட்டுத் தொகையும், விமானச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,296,352 தொகையும், வாகன பழுதுபார்த்தல் மற்றும் காப்புறுதிக்காக ரூபா 314,731 தொகையுமாக ரூபா 4,413,899 தொகை முறையற்றவாறு நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

மேலும், முகாமைத்துவச் சபையின் அங்கீகாரமின்றியும் நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களுக்கு முரணாகவும் 04 சந்தர்ப்பங்களின் போது முறையற்றவாறு ரூபா 2,300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

2010 திசெம்பர் மாதத்தில் ரூபா 3,431,400 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்று 2012 சனவரி மாதம் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரமின்றியும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணாகவும் ரூபா 3,400,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

2012 சனவரி மாதத்தில் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,000,000 செலுத்தப்பட்டிருந்ததெனினும் அந்த வாகனத்தினைக் கொள்வனவு செய்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 15,000,000 தொகைக்குரிய வட்டி அறவிடப்படாமை, 14 சந்தர்ப்பங்களில் ரூபா 10,754,399 தாபிப்பாளரின் அங்கீகாரமின்றி விடுக்கப்பட்டிருந்தமை, கணக்கு அறிக்கைகளை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை போன்ற விடயங்களின் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 08, 16, 18 ஆம் நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தன.

(இ) 2012 10.3 **பூதலைச் சுவீகரித்தல்**

பூதலைச் சுவீகரித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 ஏப்ரல் 19 ஆந் திகதி உரிய நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்தின் பொறுப்பில் வந்ததன் பின்னர், நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய சொத்துக்களைச் சுவீகரிக்கும் ஆரம்ப செயற்பாடுகளுக்காக அனுபவம் மற்றும் தகைமைகளையுடைய உள்ளபடியான நிரந்தர பதவியணியினர் இருந்தும் அச்செயற்பாடுகள் முறையான திட்டமிடலின்றி வெளிநபரொருவரால் நிறைவேற்றப்பட்டு பூதலுக்குரிய பணத்தில் ரூபா 1,003,955 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அந்த பூதலுக்குரிய அரச வங்கிக் காப்பகம் ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான 80 சொத்து விடயங்கள் தொடர்பாக திணைக்களத்தின் கோவைகளிலும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பூதல் உரிமையாளருக்குரியதாக காணப்பட்ட வங்கிக் கணக்குகளின் பெறுமதி ரூபா 45,324,443 தொகையாக இருந்த போதிலும், கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், அந்த மீதி ரூபா 51,906,005 ஆகும். அவ்வாறே, பூதல் உரிமையாளரிடம் நிலவிய மற்றுமொரு வங்கி மீதியொன்றின் பெறுமதி ரூபா 304,445 தொகை குறைத்து தகவல் குறிப்பிடப்பட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி வங்கி மீதிகளுக்கு மேலதிகமாக நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்ட ஏனைய வங்கிகளில் காணப்பட்ட ரூபா 53,646,470 தொகையான மீதியொன்று தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய வங்கி அறிக்கைகள் பூதல் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிராமையால் அந்த மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தலொன்றை கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 20 ஆந் திகதியளவில் உரிய பூதல் உரிமையாளர் மரணமடைந்து 02 வருடங்களும் 08 மாதங்களும் கடந்திருந்த போதிலும் அவரின் இறுதி விருப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டபடி அவருக்குச் சொந்தமான பண்டராரவளையில் அமைந்துள்ள வீட்டில் ‘‘சில்மாதா ஆராமய’’ ஆரம்பித்தலும், அதில் தியானப் பயிற்சி நிலையத்தை நடாத்துவதும் போன்ற நடவடிக்கைகள் கொழும்பு மஹாபோதி சங்கத்துடன் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இலங்கை மகாபோதி சங்கத்தின் பிரதிநிதியொருவரை உள்ளடக்கிய 06 நபர்களுடன் பணிப்பாளர் சபையொன்றை நம்பிக்கைப் பொறுப்பை நிர்வகிப்பதற்கென நியமித்திருக்கவில்லை.

(ஈ) 2013 4.8(ஆ) **தொங்கல் கணக்கு**

--------------------------------

நம்பிக்கைப் பொறுப்பு நிதி தொடர்பாக கணக்கு வைக்கும் சரியான திட்டமொன்று காணப்படாமையால் பூதல்கள் மூலம் திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற வட்டிப் பணம் செலவு வைக்கப்பட வேண்டிய முறை குறிப்பாக இனங்காணப்பட முடியாமையால் அது தொடர்பான தகவல்கள் கிடைக்கும் வரை தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அக் கணக்கின் தகவல்களை உரியவாறு இனங்கண்டு தீர்க்கப்படாமையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 6,731,539 மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

## 3.14 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 04 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 46 | 25 | 21 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 17 | 14 | 03 |
| | **மொத்தம்** | **70** | **44** | **26** |